# சரஸ்வதி

## கலைவிழா சிறப்பு மலர்



சரஸ்வதி மத்திய கல்லூரி

பதுளை

# தேர்தலும், பிரதிநிதித்துவ முறைமையும் - கோட்பாட்டு நோக்கு

## அறிமுகம்

தேர்தல் என்பது வாக்காளர்களின் விருப்பத் தெரிவின் அடிப்படையில் சட்டசபை பிரதிநிதிகளுக்கான ஆட்சேர்ப்பாகும். வாக்காளர்கள் தங்களின் வாக்குகளினால் சட்டசபை பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்றார்கள். சுருக்கமாகக் கூறின், தேர்தல் என்பது பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் பிரதிநிதிகள் தேர்தல் தொகுதியில் அல்லது மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படுவதைக் குறித்து நிற்கின்றது. நாட்டினை ஆளுகின்ற பிரதிநிதிகள் தேர்தல் ஊடாகவே தெரிவு செய்யப்படல் வேண்டும் என்பது ஜனநாயக கோட்பாட்டின் அடிப்படைவாதமாகும். எல்லா ஜனநாயக நாட்டிலும் சட்ட சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சி நிர்வாக உத்தியோகத்தர்கள் போன்ற அனைவரும் தேர்தல் மூலமே தெரிவு செய்யப்படுகின்றார்கள். சில நாடுகளில் ஜனாதிபதி, உப ஜனாதிபதி, நீதிபதிகள் என்பவர்கள் கூட தேர்தல் மூலமே தெரிவு செய்யப்படுகிறார்கள். ஜனநாயக பாரம்பரியத்தில் தேர்தல் என்பது மிகவும் முக்கியமானதாகும். ஆகவே மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான தேர்தலில் பங்குபற்றுவதற்கும் உரித்துடையவர்களாகின்றனர். தேர்தல் ஒன்றில் வேட்பாளர்களுக்கு இடையில் ஆகக்கூடிய ஆதரவினை பெறுகின்றவர் பிரதிநிதியாக தெரிவு செய்யப்படுகின்றார். இவர் மக்களின் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார்.

அடுத்து, பிரதிநிதித்துவம் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். பிரதிநிதித்துவம் என்பது மனோபாவம், நோக்கு, முன்னுரிமை, விருப்பம் என்பவற்றின் வழி முழுப் பிரஜைகளினாலும் தீர்மானிக்கப்படுவதாகும். அல்லது ஒரு பகுதி பிரஜைகளால் தீர்மானிக்கப்படுவதாகும். பிரஜைகள் அரசாங்கம் செயற்படுவதற்கான அனுமதியை தங்களில் இருந்து தெரிவாகும் அங்கத்தவர்களுக்கூடாக வெளிப்படுத்துகின்றனர். சுருக்கமான ஒரு விளக்கத்தினை கொடுப்பதாயின் சமூக ஒப்பந்த மரபின் வழி அரசாங்கம் உருவாவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு கருவி பிரதிநிதித்துவம் எனலாம். ஜேர்மனிய சமூக கோட்பாட்டாளர் Robert Von Mohl என்பவர் 'பிரதிநிதித்துவம் என்பது முழுப் பிரஜைகளினதும் செல்வாக்கின் மூலமான தெரிவு அல்லது பிரஜைகளில் ஒரு பகுதியினர் தங்களிலிருந்து அங்கத்தவர்களைத் தெரிவு செய்து கொள்வதன் மூலம் அரசாங்க செயற்பாட்டிற்காக அனுமதியை வெளிப்படுத்துதல் என்கிறார்''.

எனவே, பிரதிநிதி ஒருவர் தேர்தல் மூலமாகக் குறிப்பிட்ட பிரதேச மக்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டு செயற்படுகின்றபோது, இங்கு இவரின் செயற்பாடானது வாக்காளர்களின் செயற்பாடாகவே கருதப்படுகின்றது.

### 01. தேர்தலின் வகைகள் (Kinds of Election)

பொதுவாக தேர்தல்கள் இரண்டு வடிவங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றன. ஒன்று நேரடித் தேர்தல், மற்றையது மறைமுகத் தேர்தல் ஆகும்.

#### I. நேரடித் தேர்தல் (Direct Election)

இவ்வகையான தேர்தலில் வாக்காளர்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு நேரடியாகவே தேர்தலில் பங்குபற்றுகின்றார்கள். நேரடியாகத் தேர்தலில் பங்குபற்றுவதற்காக

வாக்காளர்கள் ஒவ்வொருவரும் தேர்தல் வாக்களிப்பு நிலையத்திற்கு சமூகமளிக்கும்படி வேண்டப்படுவார்கள். நேரடித் தேர்தலில் வாக்காளர்கள் பெரும்பான்மை ஆதரவினால் தமது பிரதிநிதியைத் தெரிவு செய்து கொள்கிறார்கள். நேரடியான தேர்தல் முறையானது முழுமையான ஜனநாயகப் பண்பினைக் கொண்டதாகும். ஒவ்வொரு ஜனநாயக நாட்டினதும் சட்டசபை பிரதிநிதிகள் அனைவரும் நேரடித் தேர்தல் முறை மூலமாகவே தெரிவு செய்யப்படுகின்றார்கள். உதாரணமாக பிரித்தானிய பொது மக்கள் சபை, ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை, இந்தியாவின் பொதுமக்கள் சபை (Lokh Sabha) போன்றவற்றைக் குறிப்பிடலாம். நேரடித் தேர்தல் முறைமையின் கீழ் வாக்காளர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் இடையில் நேரடியாக தொடர்பு காணப்படும். இதனால் பிரதிநிதிகள் வாக்காளர்களின் பொது விவகாரங்களில் ஆர்வமும், கூர்மையான அவதானமும் கொண்டவர்களாகக் காணப்படுவர். மக்களிடையே அரசியல், விழிப்புணர்வு ஏற்பட்டு பொது விவகாரங்களில் ஆர்வமும், எழுச்சியும் ஏற்படுகின்றது. வாக்காளர்கள் அரசு எதிர்நோக்கும் அரசியல் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கும், மக்கள் இறைமையின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துவதற்கும் நேரடித் தேர்தல் வாய்ப்பானது என கூறப்படுகின்றது.

ஆயினும், நேரடித் தேர்தல் முறைமையில் கல்வியறிவு அற்ற வாக்காளர்கள் பிரச்சாரத்தின் வழி உணர்ச்சிவசப்படுத்தப்பட்டு தவறாக வழி நடாத்தப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இதனால், தவறான கொள்கைகள், சித்தாந்தங்களைக் கொண்டவர்கள் பிரதிநிதிகளாவதற்கு சந்தர்ப்பம் இருப்பதாக கூறப்படுகின்றது. அத்துடன் சாதி, மதம், பிரதேசம், இனம், பணச்செல்வாக்கு போன்ற பண்புகள் தேர்தலில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாகக்கூறப்படுகின்றது.

II. மறைமுகத் தேர்தல் (Indirect Election)

இவ்வகையான தேர்தலில் வாக்காளர்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு நேரடியாக தேர்தலில் பங்குபற்றுவதில்லை. பதிலாக மறைமுகமாகவே பங்குபற்றுகின்றார்கள். உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் ஜனாதிபதி, உப ஜனாதிபதி ஆகியோரை தெரிவு செய்வதற்கு மறைமுகத் தேர்தலே பயன்படுத்தப்படுகின்றது. இங்கு மக்கள் தேர்தல் கல்லூரி (Election College) அங்கத்தவர்களை தெரிவு செய்வார்கள். தேர்தல் கல்லூரி அங்கத்தவர்களே பின்னர் ஜனாதிபதி, உப ஜனாதிபதி ஆகிய இருவரையும் தெரிவு செய்கின்றார்கள். இதேபோல இந்திய ஜனாதிபதியை மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்கின்றார்கள். அதாவது மக்கள் சட்டசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்ய, சட்டசபை உறுப்பினர்கள் தேர்தல் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்கின்றார்கள்.

இங்கு மறைமுகத் தேர்தலானது இரண்டு வகையான பண்புகளை வெளிப்படுத்துகின்றது. ஒன்று, மக்கள் தங்கள் பிரதிநிதிகளை நேரடியாக தெரிவு செய்கின்றார்கள். மற்றையது, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஜனாதிபதியைத் தெரிவு செய்கின்றார்கள். மறைமுகத் தேர்தலில் பங்குபற்றுகின்ற வாக்காளர்கள் பொதுவாக கல்வியறிவு கொண்டவர்களாகவே காணப்படுவார்கள். இதனால் இவர்களின் வாக்குகள் எப்போதும் சுய மதிப்பீட்டின் அடிப்படையிலானதாகவே காணப்படும். பிரச்சாரத்திற்கு மதிப்பளிப்பதாக இருக்கமாட்டாது. அரசியல் விழிப்புணர்வும், புத்திசாதுரியமும் கொண்டவர்களே மறைமுகத் தேர்தலில் பங்குபற்றுவதால் தேர்தல் முடிவுகள் எப்போதும் உயர் ஜனநாயகப் பண்பு கொண்டதாகவே காணப்படும். உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் ஜனாதிபதியை தேர்தல் கல்லூரி மூலமாகத் தெரிவு செய்கின்றபோது தேர்தல் கல்லூரி அங்கத்தவர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டே ஜனாதிபதியைத் தெரிவு செய்கின்றார்கள்.

ஆயினும், மக்கள் தமது இறைமையினை நேரடியாக அனுபவிப்பதற்கு இத்தேர்தல் தடையாக உள்ளது எனக் கூறப்படுகின்றது. மேலும், முறைமையினை விட அதிக ஜனநாயகப் பண்பினைக் கொண்டதாகும். மறைமுகத் தேர்தல் மூலமாக தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதி நேரடியாக மக்களுக்கு பொறுப்புக் கூறத் தேவையில்லை என்பதால் மக்களுடன் அவர் நேரடித் தொடர்பினை கொண்டிருப்பதில்லை எனவும் கூறப்படுகின்றது.

## 02. பிரதிநிதித்துவத்தின் வகைப்பாடுகள்

பிரதிநிதித்துவம் என்பது மிகவும் காலத்தால் முற்பட்டதாகும். புராதன, மத்திய காலங்களில் நிலவிய சமுதாயங்கள் தமது அரசியல் நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்பியிருந்தார்கள்.

நவீன காலத்தில் இப்பிரதிநிதித்துவ முறைமையானது மெருகூட்டப்பட்டு புதிய வடிவத்தினை பெற்றுக் கொண்டது. அதாவது நவீன காலத்தின் ஜனநாயக வளர்ச்சிக்கு ஏற்ப அதன் இயல்பான முக்கியத்துவம் வளர்ச்சியடைந்து வருகின்றது. அத்துடன் சமூக கோட்பாடுகளும் பிரதிநிதித்துவத்தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக விமர்சன ஆய்வுகளை மேற்கொண்டே வருகின்றன. எல்லா விமர்சன ஆய்வுகளும் நாட்டின் பிரதேசத்தினை அல்லது புவிசார் நிலையினை மையமாகக் கொண்டே பிரதிநிதித்துவம் உருவாக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றன. அத்துடன் இவ் ஆய்வுகள் பெரும்பான்மை, சிறுபான்மை சமூகங்களின் நலன் தொடர்பாக பிரதிநிதித்துவ முறைமைகளில் சில மாற்றங்களை உருவாக்க வேண்டும் எனவும் கூறுகின்றன. இவ்வகையில் பிரதிநிதித்துவம் தொடர்பாக பல கோட்பாடுகள் காணப்படுகின்றன. ஆயினும் அவற்றுள் பின்வருவன முதன்மையானவையாகும்.

1. பிரதேசவாரி பிரதிநிதித்துவம் (Territorial Representation)

குறிப்பிட்ட நாட்டின் சட்டசபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பிரதேச ரீதியான பிரதிநிதிகளாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை பிரதேசவாரி பிரதிநிதித்தவம் குறித்து நிற்கின்றது. ஒவ்வொரு பிரதேசமும் வரையறுக்கப்பட்ட வாக்காளர் தொகுதியாக வகுக்கப்படும். இவ்வாறு தொகுதி வகுக்கப்படும்போது சனத்தொகையின் அளவும் கருத்தில் எடுக்கப்படும். அதாவது, தொகுதியின் பிரதேச அளவு கருத்தில் எடுக்கப்படும் அதே நேரத்தில் வாக்களிக்கத் தகுதி உடையவர்களின் எண்ணிக்கையும் கருத்தில் எடுக்கப்படும். பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் வாக்காளர் தொகுதி ஒன்றினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவர் குறிப்பிட்ட பிரதேசத்தில் பிரதிநிதியாகவே கருதப்படுவார். ஆனால் இங்கு வாக்களிக்கத் தகுதியுடையோர்களின் எண்ணிக்கையும், பிரதேசத்தின் அளவும் கருத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

2. தொழில் வகைப் பிரதிநிதித்துவம் (Functional Representation)

பிரஜைகளால் சமுதாயத்தில் காணப்படும் தொழில்சார் பிரிவினருக்காக உருவாக்கப்படும் பிரதிநிதித்துவ முறைமையே தொழில் வகைப் பிரதிநிதித்துவ முறைமையாகும். இலகுவாக வரையறுப்பதாயின் பிரதேச ரீதியான தொகுதிகள் தொழில் வகைத் தன்மைகளின் அடிப்படையில் உருவாக்கப்படும்.

எவ்வகை தொழில்சார்ந்தோர் ஒரு பிரதேசத்தில் கூடுதலாக வாழ்கின்றார்களோ அவர்களுடைய தொகுதியாக இது கருதப்படும். அதாவது இவர்கள் ஒரு நாட்டின் குறிப்பிட்ட தொகுதியின் தொழில் வகைப் பிரிவினராக கருதப்படுவார்கள். இவ்வகையில் சட்டசபை பிரதிநிதித்துவமானது வியாபார வர்க்கம் வியாபாரியையும், தொழிலாளர் வர்க்கம்

தொழிலாளியையும், விவசாய வர்க்கம் விவசாயியையும், ஆசிரியர் வர்க்கம் ஆசிரியரையும் கொண்டு காணப்படும். தொழில் வகைப் பிரதிநிதித்துவமானது மறைந்த சோவியத் யூனியனிலும், முசோலினியின் இத்தாலியிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இப்பிரதிநிதித்துவ முறைமையினை Laski, Dunning, G.D.H. Cole போன்றவர்கள் கடுமையாக விமர்சிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

3. **சிறுபான்மையோர் பிரதிநிதித்துவம்** (Minority Representation)

ஜனநாயகத்தின் இலக்கு அரசாங்கத்தில் முழுச் சனத்தொகையினதும் பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதாகும். ஒருமித்த தன்மை, இயல்பு உள்ள மக்கள் தொகையினைக் கொண்ட அரசுகளில் தான் இவ் இலக்கு வெற்றியடையும். அதாவது ஒரே வகையான இனக்குழு மக்கள், மொழி பேசுகின்ற மக்கள், மதம், பொருளாதார அந்தஸ்து போன்றவை காணப்படுகின்ற அரசுகளில் தான் வெற்றியடைய முடியும். ஆனால் இவ்வாறான சமூக அமைப்பு காணப்படுவது மிக மிக அருமையாகவே உள்ளது.

உலகில் உள்ள அநேக அரசுகள் வெவ்வேறான சிறுபான்மையின மக்களைக் கொண்டதாக காணப்படுகின்றது. இது அரசுகளில் பிரதிநிதித்துவப் பிரச்சினைகளை உருவாக்குகின்றது. எனவே, சிறுபான்மையின மக்களுக்கு பிரதிநிதித்துவத்தினை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதே இப் பிரதிநிதித்துவ முறையாகும். அதாவது, மதம், மொழி, இனம், கலாச்சாரம் போன்ற அடிப்படையில் மக்களிற்கு பிரதிநிதித்துவத்தினை வழங்குவதாகும். சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சில நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

*(அ) கட்டுப்படுத்தப்பட்ட வாக்குமுறைமை* (Limited Vote System)

இம்முறையின் கீழ், குறைந்தது மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட பல அங்கத்தவர்கள் தொகுதிகள் உருவாக்கப்படும். ஒவ்வொரு வாக்காளருக்கும் மூன்றிற்கும் குறையாத வாக்குகள் வழங்கப்படும். ஒவ்வொரு வாக்கினையும் தாம் விரும்பும் மூன்று பேருக்கு வாக்காளன் வழங்க முடியும். இதனால் சிறுபான்மையினர் தமது பிரதிநிதியை பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமைந்துவிடுகின்றது.

*(ஆ) தனிவாக்கு முறைமை* (Single Vote System)

தனிவாக்கு முறைமையானது பல அங்கத்தவர் தேர்தல் தொகுதியில் பயன்படுத்தப்படுகின்றது. வாக்காளனுக்கு ஒரு வாக்கு மட்டும் வழங்கப்படும். வேட்பாளர்கள் அதிகப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படுவார்கள். சிறுபான்மையினர் இம் முறைமையினால் தமது பிரதிநிதிக்கு வாக்களிக்க முடியும். இங்கு பெரும்பான்மை வாக்கு என்பது தெரிவு செய்யப்படும் வேட்பாளனுக்கு வேட்பாளன் வேறுபட்டுக் காணப்படும்.

*(இ) குவிக்கப்பட்ட வாக்கு முறைமை* (Cumulative Vote System)

குவிக்கப்பட்ட வாக்கு முறையின் கீழ் தேர்தல் தொகுதி பல அங்கத்தவர் தொகுதியாக காணப்படும். வாக்காளர் ஒவ்வொருவருக்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாக்குகள் வழங்கப்படும். வாக்காளர் தனது முழு வாக்குகளையும் ஒருவருக்கு அல்லது வெவ்வேறானவர்களுக்கு வழங்கலாம். இதன் மூலம் சிறுபான்மையினர் தமது வாக்குகள் அனைத்தையும் தமது பிரதிநிதிக்கு வழங்கி அவரை வெற்றியடையச் செய்யலாம். இதனை திரண்ட வாக்கு முறைமை (Plumping Vote System) எனவும் அழைக்கப்படுகின்றார்கள்.

(ஈ) ஆசன ஒதுக்கீடு/நியமன முறைமை (Reservation of Seats/Nomination)

அரச தலைவரால் சிறுபான்மை இனத்தவர்களுக்காக பிரதிநிதி நியமனம் செய்யப்படுகின்றபோது ஒவ்வொரு சிறுபான்மை இனங்களினதும் மக்கள் தொகை கணக்கில் எடுக்கப்படும். அதே நேரத்தில் சாதாரணமாக இவர்கள் சில தேர்தல் தொகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்படுகிறார்களா என்பதும் கவனத்தில் கொள்ளப்படும். உதாரணமாக இந்தியாவில் பழங்குடியினர், ஒதுக்கப்பட்ட வகுப்பினர் போன்றவர்களுக்கு நியமன முறைமை பயன்படுத்தப்படுகின்றது.

4. விகிதாசாரப் பிரதிநிதித்துவம் (Proportional Representation)

1793 ஆம் ஆண்டு பிரான்சின் தேசிய மகாநாட்டில் முதன் முதலாக விகிதாசார பிரதிநிதித்துவ முறை பற்றி ஆலோசிக்கப்பட்டது. பின்னர் 1820 ஆம் ஆண்டு விகிதாசார பிரதிநிதித்துவ முறையானது பிரித்தானிய கல்விமானாகிய Thomas Wright Hill என்பவரால் உருவாக்கப்பட்டது. பின்னர் Sir Rowland Hill என்பவரால் அவுஸ்திரேலியாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் 1842 சுவிற்சர்லாந்திலும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு பிற்பட்ட காலங்களில் பிரித்தானிய சட்டத்தரணியாகிய Thomas Hare என்பவர் எழுதிய The Machinery of Representation என்ற நூலில் இம்முறை பற்றி எழுதியிருந்தார்.

இந்நூல் 1859 இல் விரிவாக்கப்பட்டு எழுதப்பட்ட Treatise on the Elections of Representation, என்ற நூலில் இம்முறைமை பற்றி எழுதியிருந்தார். Here இன் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை பின்னர் John Stuart Mill இனால், 1860 இல் முதன்மைப்படுத்தப்பட்டது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் இரண்டு வகையான இயல்புகள் காணப்படுகின்றன.

அ) ஒற்றை மாற்று வாக்கு முறை அல்லது ஹர் முறை (The Single Transferale Vote System or Hare System)

ஆ) பட்டியல் முறை (The List System)

*(அ) ஒற்றை மாற்று வாக்குமுறை அல்லது ஹர் முறை:-*

இது Thomas Hare என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இதனால் இவரின் பெயரால் இது அழைக்கப்படுகின்றது. ஹர் முறையில் நான்கு முக்கிய இயல்புகள் காணப்படுகின்றன.

1. பல அங்கத்தவர்களைக் கொண்ட தேர்தல் மாவட்டம்
2. ஆகக் குறைந்த தேர்தல் வீதப் பங்கு (Quota)
3. எல்லா வேட்பாளருக்குமான தனிப்பட்டியல்
4. ஒற்றை மாற்று வாக்குகள்

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் சனத் தொகையினை அடிப்படையாகக் கொண்டு சட்டசபைக்கான ஆசனங்கள், வேறுபட்ட அளவுகளில் ஒதுக்கப்படும். இதன் பின்னர், மொத்த வாக்குகள் கணக்கிடப்பட்டு ஆகக் குறைந்த தேர்தல் வீதப் பங்கு வாக்கு கணக்கிடப்படும். பொதுவாக, தேர்தல் வீதப் பங்கானது மொத்தப் பெறுமதியான வாக்குகளை தெரிவு செய்யப்பட வேண்டிய மொத்த ஆசனங்களுடன் ஒன்றைக் கூட்ட வரும் தொகையினால் பிரிக்கப்பட வேண்டும். பின்னர், பிரிக்க வரும் தொகையுடன் மீண்டும் ஒன்றைக் கூட்ட வேண்டும்.

இதனையே தேர்தல் வீதப்பங்கு என அழைக்கின்றார்கள். இதன் வாய்பாடு பின்வருமாறு அமைந்திருக்கும்.

$$\text{தேர்தல் வீதப்பங்கு} = \frac{\text{மொத்தப் பெறுமதியான வாக்குகள்}}{\text{மொத்த ஆசனங்கள்} + 1} + 1$$

வாக்காளர்கள் ஒரு தேர்தல் மாவட்டத்தில் மொத்தமாக எத்தனை வேட்பாளர்களை தெரிவு செய்ய வேண்டுமோ அத்தனை வாக்குகளை பெற்றுக் கொள்வார்கள். வாக்காளர்கள் வாக்களிக்கின்றபோது தமது விருப்பு வாக்குகளை முன்னுரிமையின்படி 1,2,3 என வழங்கும்படி கேட்கப்படுவார்கள்.

வாக்குகள் எண்ணப்படுகின்றபோது வேட்பாளர்களின் முதல் விருப்ப வாக்குகள் முதலில் எண்ணப்படும். வேண்டப்படும் தேர்தல் வீத பங்கு வாக்குகளை பெற்றவுடன் அவர் அங்கத்தவராக அறிவிக்கப்படுவார். முதல் சுற்று வாக்கில் வேண்டப்படும் தேர்தல் வீதப் பங்கு கிடைக்காவிட்டால் இரண்டாம் விருப்ப வாக்குகள் எண்ணப்படும். மொத்த அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்படும் வரை இவ்வாறான நடைமுறை பின்பற்றப்படும்.

*(ஆ) பட்டியல் முறை:-*

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் காணப்படும் அடுத்த முறைமை பட்டியல் முறைமையாகும். பட்டியல் நாட்டிற்கு நாடு வேறுபட்ட வழிமுறைகளில் பின்பற்றப்படுகின்றன. பட்டியல் முறைமையில் இரண்டு முக்கிய இயல்புகள் காணப்படுகின்றன.

1. பல அங்கத்தவர்கள் தேர்தல் மாவட்டம்.
2. தேர்தலில் பங்கு பற்றும் ஒவ்வொரு கட்சியும் தனியான அங்கத்தவர் பட்டியலைக் கொண்டிருத்தல்.

வேட்பாளர்கள் தமது கட்சி, சின்னத்தின் கீழ் பட்டியல் படுத்தப்பட்டிருப்பார்கள். ஒவ்வொரு கட்சியும் தெரிவு செய்யப்பட வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக வேட்பாளர்கள் பட்டியலை தயாரித்துக் கொள்ளும். வாக்காளர் குறிப்பிட்ட ஏதாவது ஒரு கட்சிக்கு வாக்களிக்கும்படி வேண்டப்படுவதுடன் தாம் விரும்பும் வேட்பாளர்களை தமது சுய விருப்பிற்கு ஏற்ப பட்டியல் படுத்தும் படியும் கேட்கப்படுவார்.

பட்டியல் முறைமையில் வேட்பாளர்களின் எண்ணிக்கைச் சமமாக வாக்காளனுக்கு வாக்குகள் வழங்கப்படும். ஆனால் ஒரு வேட்பாளருக்கு ஒரு வாக்கினை மட்டுமே வழங்க முடியும். பதிலாக எல்லா வாக்குகளையும் ஒருவருக்கு வழங்க முடியாது. பட்டியல் முறைமையிலும் ஹர்முறை போன்று தேர்தல் வீதப் பங்கின் அடிப்படையிலேயே வேட்பாளர் தெரிவு செய்யப்படுகின்றார். அதாவது ஒவ்வொரு கட்சியும் பெற்றுக் கொண்ட வாக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

## 5. இரண்டாவது வாக்குமுறைமை (The Second Ballot System)

தேர்தலில் இரண்டிற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் போட்டியிடுகின்றபோது தெரிவு செய்யப்படுகின்ற அங்கத்தவர்கள் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளை பெற்று விடுவதில்லை. பதிலான ஆகக்குறைந்த வாக்குகளையே பெறுகின்றார்கள் எனச் சிலர்

வாதிடுகின்றார்கள்.

இக்குறைபாட்டினை நீக்குவதற்காக ஒரு வாக்காளனுக்கு இரண்டு வாக்குகள் வழங்கப்படும். வாக்காளன் தனது முதல் விருப்பையும், இரண்டாம் விருப்பையும் தெரிவிக்கும்படி வேண்டப்படுவார். இதன் மூலம் அறுதிப் பெரும்பான்மை பெற்ற பிரதிநிதியை தெரிவு செய்ய முடியும் எனக் கூறப்படுகின்றது. இதனையே இரண்டாவது வாக்குமுறைமை எனக் கூறப்படுகின்றது.

உதாரணமாக 30,000 வாக்காளர் கொண்ட தேர்தல் மாவட்டத்தில் நான்கு பேர் போட்டியிடுகின்றார்கள் எனக் கொண்டால்,

| | |
|---|---|
| A | 12,000 |
| B | 7,000 |
| C | 6,000 |
| D | 5,000 |
| | 30,000 |

என்ற அடிப்படையில் வாக்குகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இங்கு A அறுதிப் பெரும்பான்மையினை பெற்றுக் கொண்டதாகக் கூற முடியாது. ஏனெனில் A ஐ விட B+C+D பெற்றுக் கொண்ட வாக்குகள் (18,000) அதிகமாகும். இன்னோர் வகையில் கூறின் A ஐ முதல் கற்றில் 12,000 வாக்காளர்கள் ஆதரித்திருந்த அதேநேரத்தில், 18,000 வாக்காளர்கள் எதிர்த்து வாக்களித்துள்ளார்கள். எனவே A பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார் எனக் கூறமுடியாது. எனவே A,B,C ஆகியோர்களின் இரண்டாம் விருப்ப தெரிவு வாக்குகள் எண்ணப்பட்டு அறுதிப் பெரும்பான்மையினை யார் பெறுகின்றார்களோ அவரே பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட வேண்டும். இங்குD பட்டியலில் இருந்து நீக்கப்படுவார் என்பது கருத்தில் எடுக்கப்பட வேண்டும்.

## முடிவுரை

மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு நடாத்தப்படும் தேர்தலில் பங்குபற்றுவதற்கு உரித்துடையவர்கள். அதாவது தமது விருப்பு, முன்னுரிமை என்பவற்றின் அடிப்படையில் பிரதிநிதிகளை தெரிவு செய்து கொள்ள உரிமையுடையவர்கள். தேர்தலானது குறிப்பிட்ட நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ப மறைமுகமாகவோ, நேரடியாகவோ நடைபெற்றாலும், உண்மையில் ஜனநாயகத்தின் பாரம்பரியத்தின் வழி பிரதிநிதித்துவமுறைமையினை வலுப்படுத்துகின்ற ஒன்றாகவே உள்ளது. ஆயினும், பிரதிநிதித்துவ முறைமைக்காக உருவாக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் அனைத்திலும் குறை நிறைகள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட நாட்டின் சூழ்நிலைக்கு எவ்வகை பிரதிநிதித்தவமுறை பொருத்தமானதாகக் காணப்படுகின்றதோ அதுவே நடைமுறையில் பின்பற்றப்படுகின்றது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை ஒப்பீட்டு ரீதியில் ஏனைய பிரதிநிதித்துவ முறைகளை விட சிக்கலான நடைமுறை விதிகளை கொண்டதாகும். இதனால் இம்முறையினை கண்டிக்கின்ற ஆய்வாளர்களும் காணப்படுகின்றார்கள். எவ்வாறாயினும் பிரதிநிதித்துவம் என்பது பிரஜைகளின் விருப்பும், மனோபாவம், முன்னுரிமை என்பவற்றினால் தீர்மானிக்கப்படுகின்ற ஒன்றேயாகும்.

REFERENCE:-

01. A.Appadorai; *The Substance of Politics* Oxford University Press, Delhi, 1982

02. J.C.Johari; *Principles of Modern Political Science,* Strling Publishers Private Limited, 1995

03. Durga Kant Sarmah; *Political Science;* Theory and Constitution, Wiley Eastern Limited, New Delhi, 1992.

04. David Robertson; *The Penguin Dictionary of Politics,* Penguin Books, 1985

05. David Held (Ed); *Political Theory Today,* Polity Press, 1995

த. கிருஷ்ணமோகன்
விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.